# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ஆற்றல்மிக்க செயலால் தமிழ்நாடு வளர்ச்சியடைந்துள்ளது!

## அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பாராட்டு!

சென்னை, ஏப். 23 -

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் சென்னை திருவான்மியூரில் நடைபெற்றது.

இதில், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கலந்துகொண்டு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வாக்கு சேகரித்தார்.

அப்போது பேசிய அவர்,

தமிழ்நாட்டின் வளர்ச்சியை பொறுக்காத பா.ஜ.க., முறையான நிதி வழங்காமல், தமிழ்நாட்டை பின்னுக்குத் தள்ள முயற்சி செய்வதாக குற்றம்சாட்டினார்.

மகளிர் விடியல் பயணம், மகளிர் உரிமைத் தொகை என திராவிட மாடல் ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை பட்டியலிட்ட கார்கே, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ஆற்றல்மிக்க செயலால் தமிழ்நாடு வளர்ச்சியடைந்துள்ளதாக பாராட்டு தெரிவித்தார்.

இந்த பிரச்சாரக் கூட்டத்தில், சைதாப்பேட்டை தி.மு.க. வேட்பாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன், வேளச்சேரி காங்கிரஸ் வேட்பாளர் அசன் மௌலானா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழச்சி தங்கபாண்டியன், கிரிராஜன், இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் வீரபாண்டியன், காங்கிரஸ் மூத்த நிர்வாகிகள் தங்கபாலு, ஆருண் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



வேலூர் மாவட்டம், காட்பாடி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர், அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அம்முண்டி ஊராட்சியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், வடக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், ஊராட்சி குழுத் தலைவர் வேல்முருகன், ஒன்றியச் செயலாளர் எஸ்.சரவணன், வடக்கு பகுதிச் செயலாளர் ஜி.வன்னிய ராஜா, கலையரசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. அரசின் திட்டங்கள் மீண்டும் தொடர்ந்திட வளர்ச்சியை நோக்கி செல்லும்

# தமிழகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்!

## திருச்சி மேற்கு சட்டமன்ற தொகுதி வேட்டாளரும் அமைச்சருமான கே.என். நேரு சூறாவளி பிரச்சாரம்!

திருச்சி. ஏப். 21-

தி.மு.க. முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சரும், திருச்சி மேற்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளருமான கே.என். நேரு, திருச்சி மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்றும, வீதி வீதியாக சென்றும் ஜீப்பில் சென்றும் சூறாவளி பிரச்சாரம் செய்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். சென்ற இடங்களில் எல்லாம் அனைத்து மதங்களையும் சமமாக கருதி செயல்படுவது தான் தி.மு.க. அரசின் அடிப்படைக் கொள்கை என்று கூறி இந்து, கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் அனைவரும் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். குறிப்பாக பெண் வாக்காளர்கள் ஆரத்தி எடுத்து வெற்றி திலகமிட்டு வாழ்த்து தெரிவித்தனர். அப்போது அமைச்சர் கே.என்.நேரு, பொதுமக்கள் மத்தியில் பேசும் போது, எல்லாரும் எல்லோருக்கும் எல்லாமாக கலைஞர் மகளிர் உரிமை திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம்,



மகளிர் விடியல் பயணம், நான் முதல்வன் திட்டம், கலைஞர் கனவு இல்லம், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் திட்டம், 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி,

கொரோனா நிதியாக 4000 ரூபாய்,

மக்களைத் தேடி மருத்துவம் ,

முதல்வர் மருந்தகங்கள்,

பொங்கல் பரிசு தொகையாக 3000,

கோடை கால நிதியாக 2000 மகளிர் உரிமைத் தொகை முன்பணமாக 3000 சேர்த்து 5000, வீட்டு மனை பட்டா, கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கியது.

இந்தத் திட்டங்கள் அனைத்தும் தொடர்ந்து கிடைத்திடவும்,

எப்போதும் மக்களுக்காக மக்களின் வளர்ச்சியை நோக்கி மட்டுமே செயல்படும்

நமது முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில நல்லாட்சி தொடர எனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுங்கள். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி தொடரட்டும்,

தமிழ்நாடு வெல்லட்டும். இவ்வாறு அவர் பேசினார். அவருடன் மாநகர செயலாளர் அன்பழகன், மண்டல குழு தலைவர்கள், மாவட்ட, நகர, பகுதி செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து காலை முதல் மாலை வரை தொகுதி முழுவதும் சுழன்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். நல்லாட்சி தொடர்ந்திட உதய சூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள் என்று பொதுமக்களிடம் கூறி வாக்கு கேட்டனர்.

# திருவாரூர் தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியே வெல்லும்!

## கருத்துக்கணிப்பிலும் மக்கள் கணிப்பிலும் கழக ஆட்சிக்கு பெருகும் ஆதரவு!

திருவாரூர்,ஏப்.23.

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள திருவாரூர், மன்னார்குடி, நன்னிலம், திருத்துறைப்பூண்டி உள்ளிட்ட நான்கு தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் திராவிட நாயகர் தளபதி அவர்களின் நல்வாழ்த்துக்களோடு, மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களி தந்த திருவாரூரில் தி.மு.க. சார்பில் பூண்டி. கே.கலைவாணன் அவர்களும் , மன்னார்குடியில் தி.மு.க. சார்பில் டி. ஆர்.பி.ராஜா அவர்களும் நன்னிலம் தொகுதியில் எஸ்டிபிஐ சார்பில் முகமது முபாரக் அவர்களும் , திருத்துறைப்பூண்டியில் சிபிஐ சார்பில் கே. மாரிமுத்து அவர்களும் மக்களின் ஏகோபித்த ஆதரவோடு போட்டியிடுகின்றனர்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து திராவிட நாயகர் கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் திருவாரூரில் பிரச்சாரத்தை துவக்கி வைத்த நிலையில் , திராவிடர் கழக தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்களும், கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர்களின் நம்பிக்கை உதயநிதி ஸ்டாலின் அவர்களும் , நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி அவர்களும் தொடர்ந்து பிரச்சாரம் செய்தனர்.

மேலும் சி.பி.ஐ. தேசிய கட்டுப்பாட்டுக் குழு தலைவர் இரா.முத்தரசன், சி.பி.எம். கட்டுப்பட்டுக்குழுதலைவர் ராமகிருஷ்ணன் உள்ளிட்ட தேசிய தலைவர்களும் திருவாரூரில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்களுக்கு ஆதரவு பிரச்சாரம் மேற்கொண்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஐந்தாண்டு கால பொற்கால ஆட்சி, மக்களுக்கு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சி தந்திருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, மகளிர் விடியல் பயணம், புதுமைப்பெண் ,தமிழ்புதல்வன் , நான் முதல்வன் உள்ளிட்ட உலகம் போற்றும் அற்புத திட்டங்கள் , ஒன்றிய அரசின் இந்தி திணிப்பு, புதிய கல்விக் கொள்கை , சனாதன திணிப்பு, சி.ஏ.ஏ., புதிய வேளாண் சட்டம், நாடாளுமன்ற தொகுதிகள் சீரமைப்பு உள்ளிட்ட எண்ணற்ற நெருக்கடிக்களில் அதனை தனது ராஜதந்திரங்களால் வென்றடுத்த முதலமைச்சரின் வெற்றியால் ஈர்க்கப்பட்ட பொதுமக்கள் , இப்படி ஒரு முதல்வரை பெற்றமைக்கு பெருமைப்படுவதோடு , மக்கள் இடத்தில் இருந்து சிந்திக்கும் ஒரு முதல்வரை 2026ல் மீண்டும் முதல்வராக தெரிவுசெய்ய முடிவெடுத்திருக்கிறார்கள்.

இதனையே அனைத்து பத்திரிகை மற்றும் ஊடகங்கள், சமூக வளைதளங்களில் என அனைத்திலும் ஒத்த குரலாக பிரதிபலிக்கிறது. திருவாரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியே வெல்லும் என்பதும் தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான ஆட்சியே தொடரும் என்பதும் கருத்துக்கணிப்புக்களாலும் மக்கள் கணிப்புக்களாலும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

## 2026 சட்டமன்றத் தேர்தலில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 21.4.2026 அன்று, அவர் போட்டியிடுகிற சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் பரப்புரையை நிறைவு செய்தபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு:







● 2026 சட்டமன்றத் தேர்தலுக்காக பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தில் தொடங்கி 23 நாட்கள் 135 தொகுதிகளில் மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, மாநிலம் முழுவதும் மேற்கொண்டிருந்த பரப்புரைப் பயணத்தை, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் உள்ள தந்தை பெரியார் சிலை அருகே நிறைவு செய்தார்.



